# குறிஞ்சியில் - வேங்கை

முனைவர். டு. குமாரி கிருஷ்ணவேணி

தமிழ்த்துறை, ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி சுஸ்கான்கடை

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் செம்பொன்னின் செய்வினைத் திறானவாம் நிரம்பிய நல்லணியாகத் திகழும் இலக்கியம் கலித்தொகை. அதனால் தான் “கற்றறிந்தார் ஏத்தும் கலி” எனச் சான்றோர் பகிர்கின்றனர். இச்செய்யுளில் காணப்படும் உவமைகளின் திறம் உரைக்கப்படும் அறம்இ அவ்வத்திணை சார்ந்த விலங்குகளையும், நிலத்து மக்கள் வாழ்வையும் உணர்த்துகின்றன. கலித்தொகையில் கபிலர் தம் குறிஞ்சிப் பாடல் மட்டும் ஆய்வுக் கட்டுரைக்காக நோக்கப்பட்டுள்ளது. மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சியாகும். இங்கே பசுமையான சோலைகள் தெளிந்த நீர் சுனைகள், வானுயர் மரங்கள், துள்ளித்திரியும் மான், யானை, புலி போன்ற வேறு பல விலங்குகளும் இவ்விடத்தில் மிகுதி. இயற்கையின் எழில் ஒளி வீசும் இங்கே காளை ஒருவனும் கன்னி ஒருத்தியும் தமக்குத் தாமே காதல் கொண்டு வாழும் கால கட்டத்தில் தலைவனின் பெருமை, அவன் நாட்டின் பெருமையைப் பேசும் போது ‘வேங்கை’ என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்படுகிறது. வேங்கை என்பது வேங்கை மரம் என்றும், புலி என்றும் இருவித பொருள் கொள்ளலாம். குறிஞ்சிப் பாடலில் வேங்கை என்ற சொல்லானது குறிஞ்சி நிலத்திற்கே உரித்தான மரமாகக் கொள்ளப்பட்டுள்ளது. காரணம் வேங்கை மலரும் காலத்தில் தான் குறிஞ்சி நில மக்களாகிய கானவர் திருமணம் முடித்தலே செய்வார். வேங்கை மரத்தின் கீழே மேடை அமைத்து அதில் அமர்ந்து மணம் பேசுவதாகவும் கூறப்பட்டுள்ளது. இது அவர்களின் மரபு. இதிலிருந்து கானவர் தங்கள் வீட்டு முற்றத்தில் வேங்கை மரம் நட்டு வைக்கின்ற தன்மையும் காணலாம். பெண்கள் பாட்டுப் பாடி நெல் குற்றும் போதும் வேங்கையை வென்ற யானையினைக் கொண்ட மலை நாடன் என அங்கேயும் வேங்கை மரத்தைப் புலியாகவும் உவமிக்கின்றனர். தோழி அறத்தோடு நிற்குமிடத்துத் தலைவி வேங்கைப் பூவைக் கூறி தன் நாட்டின் பெருமையைக் கூறுகிறாள். மட்டுமல்ல தலைவியினது அழகினைக் கூறும் போதும் வேங்கைப் பூவுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகிறது. இவ்விதம் கலித்தொகை குறிஞ்சியில் வேங்கை என்ற சொல்லாட்சி பயன்படும் விதத்தை அறியலாம்.

**திறவு சொற்கள்**: குறிஞ்சி, வேங்கை